2010 மே 11]

164—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***42461—திரு. வை. காவேரி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

எடப்பாடியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தொடங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி, அவையில் இல்லை. மாற்றாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.*

திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி தாலுகா தலைமையிடமாகும். எடப்பாடி தாலுகா, சங்ககிரியிலே 3,000 வாகனங்கள் பதிவாகியிருக்கின்றன. அந்தச் சுற்றுப் பகுதிகளிலே வாகனங்கள், அதிகமாக இருந்துகொண்டிருக்கின்றன. இதிலே எடப்பாடி, பூலாம்பட்டி என்ற இரண்டு காவல் நிலையங்கள் இருக்கின்றன. பூலாம்பட்டி காவல் நிலைய எல்லை, சங்ககிரிக்கும் பூலாம்பட்டிக்கும் இடையே 45 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அங்கே வாகன விபத்து ஏற்பட்டால், சங்ககிரியிலே இருக்கின்ற R.T.O. அலுவலகத்திற்குக் கொண்டுவந்து காண்பிக்க வேண்டிய நிலை இருக்கிறது. 20 ஆண்டுக் காலமாக இப்படிப்பட்ட நிலை இருந்துகொண்டிருக்கிறது. சங்ககிரியிலே 4 ஆயிரம் வாகனங்களுக்கும் மேலாக மிக அதிகமாக இருக்கின்றன. சங்ககிரியிலே 8 ஆயிரம் வாகனங்கள் பதிவாகி இருக்கின்ற நிலையும் இருப்பதால், சங்ககிரியிலே 6 ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன. ஆனால் ஒரு ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகூட எடப்பாடியிலே இல்லை. எடப்பாடி தொகுதியிலே மிகவும் பின்தங்கிய இனமும், தாழ்த்தப்பட்ட இனமும் சார்ந்த மக்கள் 80 சதவிகிதத்திற்கு மேல் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். பொருளாதாரச் சிக்கலும், மன உளைச்சலும் அவர்களுக்கு*

இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, எடப்பாடியிலே ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தைத் தொடங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓரிடத்திலே துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தொடங்க வேண்டுமென்று சொன்னால், அந்தப் பகுதியிலே 3 ஆயிரம் வாகனங்களுக்கு மேல் இருந்தாகவேண்டும். தற்போது எடப்பாடியிலே 1,916 வாகனங்கள்தான் இருக்கின்றன. மினி பேருந்துகள் 5; தனியார் பேருந்துகள் 11; சரக்கு வாகனங்கள் 905; National Permit சரக்கு வாகனங்கள் 702; சுற்றுலா Maxi cab 56; சுற்றுலாச் சீருந்துகள் 104; ஆட்டோ ரிக்ஷாக்கள் 35 மற்றும் கல்வி நிறுவனப் பேருந்துகள் 98. எனவே இன்னும் ஆயிரம் வாகனங்கள் இருந்தால்தான் அங்கே துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தைத் தொடங்குவதற்கு ஏதுவாக இருக்கும். இன்னொன்று, எடப்பாடியிலிருந்து சங்ககிரி 10 கிலோ மீட்டர் தூரத்திலேதான் இருக்கிறது. மேலும், சங்ககிரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தரம் உயர்த்தப்பட்டு, புதிய கட்டடம் கட்டப்பட்டு அது விரைவிலே திறக்கப்படவிருக்கின்றது. அங்கே ஓட்டுநர் தளமும் அமைக்கப்படவிருக்கின்றது. எனவே இவற்றையெல்லாம் நீங்கள் உபயோகித்துக்கொள்ளலாம். எடப்பாடி தலைமையிடமாக இருக்கின்ற காரணத்தால், வாகனங்கள் அதிகமாக வரும்போது வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தைத் திறக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன். (குறுக்கீடு) No supplementary question.

திரு. பி. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, செங்குன்றத்தில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக பாடியநல்லூரில் இடம் தேர்வு செய்யப்பட்டும்,

TRUTH ALONE TRIUMPHS

2010 மே 11]

அங்கே இன்னும் கட்டடம் கட்டப்படவில்லை. எனவே, பாடியநல்லூரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். சென்ற முறை இதே கேள்வியைக் கேட்டபோது, இந்த ஆண்டு தொடங்கப்படும் என்று கடந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆண்டாவது இதனைச் சிறப்பு நேர்வாக எடுத்துக்கொண்டு அந்தப் பணி தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்கு இடம் இருக்கிறது என்பதை கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கு நன்றி. அந்தப் பணி விரைவிலே தொடங்கப்படும். ஏனென்றால், புதிய கட்டடம் கட்டுவதற்கு எங்களுக்கு நிதி சம்பந்தமாக சிரமம் ஒன்றுமில்லை. உறுதியாக அந்தக் கட்டடம் கட்டப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.*

திரு. குத்தாலம் க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் பணிக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில் என் தொகுதியில் பல்வேறு பணிகளை நிறைவேற்றி தந்தமைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருவாரூர் மாவட்டம், குத்தாலம் தொகுதியில் குடவாசல், தாலுகா தலைநகரமாகவும், ஒன்றியத் தலைநகரமாகவும் உள்ளது. ஓட்டுநர், நடத்துநர் உரிமம், வாகனப் பதிவு, தகுதிச் சான்றிதழ் உள்ளிட்ட பல பணிகளுக்கு 25 கிலோ மீட்டர் தூரமுள்ள திருவாரூருக்குச் செல்ல வேண்டியுள்ளது. மேலும் அருகில் இருக்கின்ற வலங்கைமான், நன்னிலம் போன்ற பகுதிகளுக்குச் செல்லவேண்டுமானால் ஏறக்குறைய 35 கிலோ மீட்டர் முதல் 50 கிலோ மீட்டர் வரை செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, நன்னிலம், வலங்கைமான் பகுதிகளுக்கு மையமாக குடவாசல் இருக்கின்ற காரணத்தால், அங்கே மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தைப் புதிதாக அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிவதோடு,*

இதுகுறித்து கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் பேசியபோது, நிச்சயமாக இது பரிசீலிக்கப்படும் என்று அப்போது பதிலளித்தார்கள். இந்த ஆண்டு அதற்கு பெருமளவு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். அம்பாசமுத்திரத்திற்கு அது வந்திருக்கிறது. ஆகவே, குத்தாலம் தொகுதியில் இருக்கின்ற குடவாசலுக்கு இதை சிறப்பினமாகக் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தைத் தொடங்குவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்று சொன்னால், அதுபற்றி அரசு அதிகாரிகள் சென்று பார்க்கிறபோது அங்கே 3 ஆயிரம் வாகனங்களுக்குக் குறைவாக இருக்கின்ற காரணத்தால்தான், அந்தப் பகுதியிலே புதிய அலுவலகம் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே சொன்னதைப்போல 3 ஆயிரம் வாகனங்களுக்கு அதிகமாக இருக்குமானால் அதுபற்றி பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 165, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

165—

ஆரம்ப சுகாதார நிலையம்

***29240—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,